**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.1138/2022**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாண்டி | Caste | : |
| Father 's Name / Husband Name | : பால்சாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(11.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது விருதுநகர் மாவட்டம் சின்னபேராளியில் குடியிருந்து வருகிறேன். நான் கட்டிட வேலை செய்து வருகிறேன். நானும் எதிரிகளும் தற்போது சமாதானம் ஆகிவிட்டோம். நான் கடந்த 16.10.2022 அன்று இரவு சுமார் 9.00 மணியளவில் நாங்கள் அங்கு இருக்கும் கோழிப்பண்ணையில் தளம் போட்டுக் கொண்டிருந்தபோது யாரோ சில நபர்கள் என்னை தகாத வார்த்தைகளால் பேசி அடித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள். இருட்டாக இருந்ததால் யார் என்று தெரியவில்லை. **சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.1138/2022**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **அர்ச்சுனன்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **கருப்பையா** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(11.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை மாவட்டம் மையிட்டான்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கட்டிட வேலை செய்து வருகிறேன். எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.1138/2022**
**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **அழகுபாண்டி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **வீரணன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(11.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை மாவட்டம் மையிட்டான்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கட்டிட வேலை செய்து வருகிறேன். எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.1138/2022**
**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : பவுன்ராஜ் | Caste | : |
| Father 's Name / Husband Name | : **கிருஷ்ணன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(11.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை மாவட்டம் கள்ளிக்குடி காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்பு மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் திரு.ரமேஷ்பாபு என்பவரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம். அவர்கள் பணி மாறுதலாகி வேறு மாவட்டத்திற்கு சென்று விட்டதால் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கின்றேன். கடந்த 18.10.2022ம் தேதி 19.00 மணிக்கு மேற்படி சார்பு ஆய்வாளர் நிலைய பொறுப்பில் பணியிலிருக்கும் போது அவரது பார்வைக்கு வைக்கப்பட்ட கள்ளிக்குடி மனு ரசிது எண். 360/22 ஐ பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 155/2022 பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதசவின் படி வழக்கு பதிவு செய்து புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மற்ற நகல்களை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கு கொண்டு அன்றைய தினமே வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 20.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ஆதிகேசவன் மற்றும் அழகர்சாமி ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகும்.** மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரிகள் தேடி வந்த நிலையில் எதிரிகள் மாண்புமிகு உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் முன்பிணை பெற்று விட்டபடியால் அவர்கள் கைது செய்யப்படவில்லை. பின்பு இவ்வழக்கை சார்பு ஆய்வாளர் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இவ்வழக்கில் காயம்பட்டவருக்கு சிகிச்சையளித்து காயச்சான்று வழங்கிய விருதுநகர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.மதன்குமார் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்றுள்ளார். **அந்த காயச்சான்று அ.சா.ஆ.5 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** மேற்படி மருத்துவர் மற்றும் மனு ரசீது தாக்கல் செய்த தலைமைக்காவலர் ராதாகிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்னர் சார்பு ஆய்வாளர் தனது விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் கு.வி:**

வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளித்துள்ளதால் எனக்கு விசாரணை பற்றி தெரியாது என்றும் பொய்யான தகவல்களை தயார் செய்து எதிரியின் மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.